1995 ஏப்ரல் 21]

398—

வைத்தீஸ்வரன் கோவிலுக்கு விடுதி கட்டுதல்

16116*—திரு. து. மூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. து. மூர்த்தி: தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்கு பின்னர்தான் தமிழகத்தில் இன்றைக்கு ஆன்மீகம் சிறப்பான முறையிலே தழைத்தோங்கி, இன்று ஒவ்வொரு திருக்கோவிலிலும் ஒருகால பூஜை நிச்சயம் நடக்க வேண்டும் எனபதற்காக புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான ஒரு செயலை செய்து கொண்டு வருகிறார்கள். இந்த நன்னாளில் எனது சீர்காழித் தொகுதிக்குபட்ட வைத்தீஸ்வரன் கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் அதிகமாக வருகிறாரகள். மேலும், சாதாரண நாட்களிலும், விசேஷ நாட்களிலும் பல மாநிலங்களிலிருந்தும் இந்தச் சிறப்பு வாய்ந்த கோவிலுக்கு பக்தர்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். சில பக்தரகள், இரண்டு நாட்களும், அதற்கு மேற்பட்ட நாட்களும் தங்கிச் செல்கிற நிலை ஏற்படுகிறது. அப்போது பக்தர்கள் தங்குவதற்கு இடம்

[1995 ஏப்ரல் 21

இல்லாமல் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வருகிற பக்தர்களுடைய அவஸ்தையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்காக தங்கும் விடுதி கட்டித்தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன் கோவில் கிராமத்தில் அருள்மிகு வைத்தியநாதன் சுவாமி திருக்கோவில் இருக்கிறது. அந்தத் திருக்கோவிலில் கார்த்திகை தினத்தன்று மட்டுமே பெருமளவில் பக்தர்கள் வருகின்றார்கள். மற்ற நாட்களில் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றார்கள். அது ஒரு சாதாரண கிராமம் என்ற காரணத்தால் வருகின்ற பக்தர்கள் சாமி தரிசனம் செய்து விட்டு அன்றே திரும்பி விடுகின்றார்கள். அப்படி திரும்பி விடுவதற்குக் காரணம் மேற்படி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் சீர்காழி என்ற ஊர் இருக்கிறது. 15 கிலோ மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை இருக்கிறது. அங்கு வருகிற பக்தர்கள் அங்கு தங்குவதில்லை. தனியார்களுடைய தங்கும் விடுதியும் இல்லை. இந்தக் கோவிலுடைய நிர்வாகம் பரம்பரை அறங்காவலராக தர்மபுரி ஆதீனத்தார் இருக்கின்றார்கள். ஆகவே, இதிலே தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்றாலும் நம்முடைய துறை அதிலே ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் தான் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தீஸ்வரன் கோவில் ஆலயத்தில் உண்டியல் வருவாய் எவ்வளவு, அந்த வருவாயிலிருந்து தங்கும் விடுதி கட்டப்படுமா? மேலும் அந்த ஆலயத்தின் மொத்த வருமானம் எவ்வளவு? இதன் மூலம் இதுவரை எவ்வளவு மேம்பாடு செய்யப்பட்டுள்ளது? அப்படி என்றால் பக்தர்கள் தங்கும் விடுதி அமைக்கப்படுமா? அது எப்போது அமைக்கப்படும் என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்டியலினுடைய வருடாந்திர வருமானம் ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய். மொத்த வருமானம் ஏறத்தாழ 39,64,247 ரூபாய். அந்தக் கோவிலினுடைய பணம் 2 கோடியே 35 லட்சம் ரூபாய் வைப்பு நிதியில் உள்ளது. ஆகவே, கட்டிடம் கட்ட வேண்டும்

1995 ஏப்ரல் 21]

என்றாலும், அதனுடைய கோவிலினுடைய பிரகாரத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றாலும், அதற்கு ஆதீனம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதீனம் எங்களுக்கு இப்படி தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்று பரிந்துரை செய்தால். உடனடியாக நாங்கள் அனுமதி கொடுப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 399, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 400, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

400—

நூற்பு மையத்திற்குக் கருவிகளைப் பயன்படுத்த நடவடிக்கை

*22581—**திரு ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், இடையன்வலசு கிராம நூற்பு மையத்திற்கு சொந்தமான பல விலை உயர்ந்த கருவிகளை தக்க முறையில் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி வட்டம் இடையன்வலசு கிராமிய நூற்பு மையத்திற்குச் சொந்தமான கருவிகளைப் பயன்படுத்த எவ்விதமான சாத்தியக் கூறுகளும் இல்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம் இடையன்வலசு கிராமம் என்பது மிகவும் ஏழை விவசாயிகள் வாழக்கூடிய ஒரு பகுதி. வேலையற்ற கிராம இளைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். எனவே, இந்த நூற்பு மையத்தில் இருக்கக்கூடிய விலை உயர்ந்த கருவிகளைப் பயன்படுத்தி, இந்த நூற்பு மையத்தை மீண்டும் நன்கு செயற்படுததச் செய்தால், வேலைவாய்ப்பு அதிகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.